**Deposition of Witness**
**(Chapter XXIII Code of Criminal Procedure )**
**In the Court of Judicial Magistrate, No.III, Cuddalore.**

| | |
|---|---|
| Case Number | : C.C.No.203 /2023 |
| Police Station | : Thiruppapuliyur P.S. |
| Deposition of witness for Prosecution | : L.W.11 / P.W.8 |
| Name | : பாபு |
| Father Name/Husband Name | : வெங்கடேசன் |
| Village | : |
| Cuddalore | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 விதிமுறைகளின் படி 20.03.2025 நாளாகிய இன்று திருமதி.L.Vanaja, B.A., B.L., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதன்மை விசாரணை**

**01.** நான் தற்போது மேற்கு ராமாபுரத்தில் வசித்து வருகிறேன். நான் பைனான்ஸில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. என் ஊர்காரரின் ஆண் குழந்தை இறந்துவிட்டதாக சொன்னார்கள். விபத்து நடந்த இடத்தை சென்று நான் பார்த்தேன். நான் அங்கு சென்று விசாரித்தபோது மவுண்ட் லிட்ரா ஸ்கூல் வேன் இடித்து விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். இந்த வழக்கு பற்றிய வேறு விவரம் எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரி அனுமதி கோரப்பட்டது, சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**02.** ஆஜர் எதிரி எனது பக்கத்து ஊர்காரர் என்ற முறையில் எனக்கு தெரியும். 27.03.2023 ம் தேதி மாலை 05.00 மணியளவில் நானும் வெங்கடேசனும் சொந்த வேலை காரணமாக ரங்கரூப் மகால் அருகே சென்றோம் என்றால் சரியல்ல. அப்போது திருப்பாப்புலியூர் போலிசார் வாகன விபத்து நடந்தது சம்மந்தமாக எதிரி செம்பையார் என்பவரை எங்கள் முன்னிலையில் விசாரித்தபோது அவர் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றாலும், அதில் எங்கள் முன்னிலையில் போலிசார் பதிவு செய்தார்கள் என்றும் அதில் நானும், வெங்கடேசனும் கையெழுத்து போட்டுவிட்டு தற்போது எதிரியை காப்பாற்றுவதற்காக பிறழ்சாட்சியாக மாறி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை என்று கூறப்பட்டது.

Taken down by me in the presence of Accused, and read over to the witness and admitted by her/him to be correct.

(S/d. L.Vanaja, B.A.,B.L.,)
Judicial Magistrate No.III
Cuddalore.

**Deposition of Witness**
**(Chapter XXIII Code of Criminal Procedure )**
**In the Court of Judicial Magistrate, No.III, Cuddalore.**

| | |
|---|---|
| Case Number | : C.C.No.203 /2023 |
| Police Station | : Thiruppapuliyur P.S. |
| Deposition of witness for Prosecution | : L.W.14 / P.W.9 |
| Name | : மருத்துவர். கோபாலகிருஷ்ணன் |
| Father Name/Husband Name | : |
| Village | : |
| Cuddalore | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 விதிமுறைகளின் படி 20.03.2025 நாளாகிய இன்று திருமதி.L.Vanaja, B.A., B.L., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதன்மை விசாரணை**

**01.** நான் தற்போது கடலூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.03.2023 ம் தேதி மதியம் 01.05 மணியளவில் நான் மேற்படி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது திருப்பாப்புலியூர் காவல் நிலைய குற்ற எண்.142/2023, இ.த.ச., பிரிவுகள் 279, 304( A) வழக்கின் வாகன விபத்தில் இறந்துபோன தேஜேஸ்வரன் த.பெ.சீனிவாசன், வயது-3, மேற்கு ராமாபுரத்தை சேர்ந்த அவரை பிரேத பரிசோதனை செய்வதற்காக காவல் ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தின் அடிப்படையில் முதல்நிலை காவலர் -199 திரு.ராமமூர்த்தி கொடுத்த கடிதத்தை பெற்று அவர் பிரேதத்தை அடையாளம் காட்ட பிரேத பரிசோதனை 01.30 மணிக்கு தொடங்கி 02.30 மணிவரை பிரேத பரிசோதனை செய்தேன்.

மிதமான உடல் வாகு உள்ள ஆண் குழந்தையின் பிரேதம் ஒன்று காணப்பட்டது. கைகள் சாதாரணநிலையில் இருந்தது.

**வெளிப்புற காயங்கள்**

**02.** 1. இடது பக்க முன் தலை, பக்கவாட்டு தலை, மேல் தலை ஆகியவற்றில் எலும்பு முறிவு காணப்பட்டது. 2. மூளை சவ்வு கிழிந்த நிலையில் காணப்பட்டது. 3. வலது பக்க பக்கவாட்டு தலை எலும்பு உடைந்து காணப்பட்டது. 4. மூளை பாதியளவு மட்டுமே இருந்தது. 5. வலது பக்க முகம் அழுந்தியும், இடது பக்க முகம் வீங்கியும் காணப்பட்டது. 6. வலது பக்க காலில் சிராய்ப்பு காயம் 15x3 செ.மீ அளவில் காணப்பட்டது. அதே வலது காலில் 10x2 செ.மீ அளவில் மற்றொரு சிராய்ப்பு காணப்பட்டது. வலது பக்க தொடையில் 0.5x0.5 செ.மீ அளவில் பலதரப்பட்ட சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டது. வலது கண்ணின் பக்கவாட்டில் 7x5 செ.மீ அளவிலான சிராய்ப்பு காயம் காணப்பட்டது. வலதுபக்க மூக்கின் அருகே 3x3 செ.மீ அளவிலான சிராய்ப்பு காயம் காணப்பட்டது. வலது பக்க கன்னத்தில் 2x2 செ.மீ அளவிலான சிராய்ப்பு காயம் காணப்பட்டது. கழுத்தில் 05.x0.5 செ.மீ அளவிலான பல்வெறு சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

உட்புற காயங்கள்

**03.** வயிறு சாதாரண நிலையில் இருந்தது. நெஞ்சுக்கூடு எலும்பு உறுதியாக இருந்தது. இருதயம், நுரையீரல், கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகம் வெளிறி காணப்பட்டது. குரல்வளை எலும்பு உறுதியாக இருந்தது. வயிற்றில் 100 மி.லி அளவில் திரவம் காணப்பட்டது. குடல் உப்பி காணப்பட்டது. சிறுநிர் பை சாதாரண நிலையில் இருந்தது. தலை சிதைந்து காணப்பட்டது. மூளை அறையின் உட்பகுதி சவ்வு கிழிந்து வெளியே தெரிந்த நிலையில் இருந்தது. மூளை 100 முதல் 150 கிராம் அளவிலேயே இருந்தது. பிணக்கூறாய்வு மதியம் 02.30 மணியளவில் நிறைவுற்றது. இறப்பானது பிணக்கூறாய்விற்கு 4 முதல் 8 மணிநேரத்திற்கு முன்பு நடந்திருக்கக்கூடும். இறப்பானது தலை காயங்களினாலும், அதிகளவு ரத்தப்போக்கு ஏற்பட்டதனால் ஏற்பட்ட அதிர்ச்சியால் ஏற்பட்டிருக்கக்கூடும்.

**( 27.03.2023 தேதியிட்ட பிரேத பரிசோதனை சான்று அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை என்று கூறப்பட்டது.

Taken down by me in the presence of Accused, and read over to the witness and admitted by her/him to be correct.

(S/d. L.Vanaja, B.A.,B.L.,)
Judicial Magistrate No.III
Cuddalore.